ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිශෙෂමානது

## அதி விசேஷமானது

අංක 1901/19 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

*1901/19 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 973*

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16 (இ) பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இந்த அறிவித்தல் மூலம் அனைத்து வகை மதுபானம் மற்றும் பியர் உற்பத்தியாளர்கள் மாதமொன்றிற்கு குறைந்த பட்சம் ரூபா 200 மில்லியன் மது வரியொன்றினைச் செலுத்துதல் வேண்டும் என இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*2. ஏதேனும் மாதமொன்றுக்கு ஏற்புடையதான இந்நிபந்தனையினை பூரணப்படுத்த தவறும் மதுபானம் மற்றும் பியர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி உரிமங்கள் அடுத்து வரும் மாதம் 01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், இந்நடைமுறை 2015.04.01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, பெப்புருவரி 13.*

*3-78/1*

---

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 974*

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2010, நவெம்பர் 19 ஆந் திகதிய 1680/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட 926 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 15, 16, 17, 18, 19, 20, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 33, 38 மற்றும் 43 ஆகிய இலக்கங்களுடைய பிரிவுகள், 2015.01.01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் அட்டவணை "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தால் திருத்தப்படுகின்றது என இந்த அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

மேலும், 2011.05.31 ஆந் திகதிய 1708/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட 936 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பகுதி II, 2015.01.01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் அட்டவணை "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

2. மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளின் கீழ் வருகின்ற 2015 ஆம் ஆண்டு தொடர்பில் உரிமங்களை ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ள மதுவரி உரிமம்பெற்றவர்கள் அனைவரும், 2015.03.31 ஆந் திகதிக்கு முன்னர் நிலுவைக் கொடுப்பனவை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2015, பெப்புருவரி 13.

**அட்டவணை "அ"**

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| **தொடர் இல.** | **உரிமத்தின் தன்மை அல்லது விபரம்** | **வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா** | **பிணைப் பொறுப்பு (ரூபா)** |
| 1. | மதுபானம் மொத்த விற்பனைக்கான உரிமம் (எவ். எல். 3) | 1,000,000 | 50,000 (சாராயத்திற்கு மட்டும்) |
| 2. | மதுபானம் சில்லறை விற்பனைக்கான உரிமம் (எவ். எல் 4) : | | |
| | 1. மாநகர சபை எல்லையினுள் | 600,000 | 25,000 |
| | 2. நகர சபை எல்லையினுள் | 400,000 | 25,000 |
| | 3. ஏனைய பிரதேசங்களில் | 300,000 | 25,000 |
| | 4. வியாபாரம் ஒன்றின் அல்லது நிறுவனம் அல்லது அதன் பிரதான வியாபார நிறுவனம் வருடமொன்றுக்கு 72 மில்லியன் ரூபாவுக்குக் மேலாக வருமானம் பெறும் பல்பொருட் சந்தை மற்றும் வியாபார நிறுவனங்கள் என்பனவற்றிற்காக அவை தாபிக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தினைக் கருத்திற்கொள்ளாது மதுபானம் சில்லறை விற்பனைக்காக வழங்கப்படும் உரிமம் | 800,000 | 25,000 |
| 3. | விடுதிகளுக்கான உரிமம் (எவ். எல்.7) சுற்றுலா சபையால் அங்கீ கரிக்கப்பட்டவை). | | |
| | 1. 250 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 1,000,000 | 5,000 |
| | 2. 200 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 800,000 | 5,000 |
| | 3. 100 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 450,000 | 5,000 |
| | 4. 50 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 400,000 | 5,000 |
| | 5. 20 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 350,000 | 5,000 |
| | 6 20 இற்குக் குறைவான அறைகள் | 300,000 | 5,000 |
| | 7. சுற்றுலா சபையின் அங்கீகாரத்தைப் பெறாத 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | 300,000 | 25,000 |
| 4. | ஹோட்டல் மதுசாலைக்கான உரிமம் (எவ். எல். 8) | | |
| | 1. மாநகர சபை எல்லையினுள் | 100,000 | - |
| | 2. ஏனைய பிரதேசங்களில் | 80,000 | - |
| | 3. துணை உரிமம் | 50,000 | - |
| 5. | விசேட சந்தர்ப்ப உரிமம் (நாளொன்றுக்கு) (எவ். எல். 14) (விண்ணப்பக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது) | 10,000 | - |

**அட்டவணை "அ"** *(தொடர்ச்சி)*

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| தொடர் இல. | உரிமத்தினள் தன்மை அல்லது விபரம் | வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா | பிணைப் பொறுப்பு ரூபா |
| 6. | விற்பனை நேரங்களை நீடிப்பு செய்வதற்கான மேலதிக உரிமம் (எவ்.எல். 15)<br>1. முதல் இரண்டு மணித்தியாலங்களுக்குமாக (மணித்தியாலத்திற்கு)<br>2. அதற்கு மேலதிகமாக (மணித்தியாலயத்திற்கு) (விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படமாட்டாது) | <br>1,000<br>10,000 | <br>-<br>- |
| 7. | சினிமா கொட்டகை களியாட்ட மதுபானசாலை உரிமம் (எவ். எல். 9) | 300,000 | 25,000 |
| 8. | வாடி வீட்டிற்கான உரிமம் (எவ். எல். 12) | 300,000 | 25,000 |
| 9. | உணவுச்சாலைகளுக்கான உரிமம் (சுற்றுலாச் சபையின் அங்கீகாரம் பெற்றவை) (எவ். எல். 11) :<br>1. உணவுச்சாலை தரம் "அ"<br>2. உணவுச்சாலை தரம் "ஆ"<br>3. உணவுச்சாலை தரம் "இ"<br>4. சுற்றுலாச் சபையின் அங்கீகாரம் பெறாத உணவுச்சாலை (விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படும்) | <br>500,000<br>400,000<br>300,000<br>300,000 | <br>5,000<br>5,000<br>5,000<br>25,000 |
| 10. | புகையிரத நிலைய உணவுச்சாலை (எவ். எல். 10) | 50,000 | 25,000 |
| 11. | உரித்து உரிமம்பெற்ற கழகங்களுக்கான உரிமம் (எவ். எல். 13) | 800,000 | 25,000 |
| 12. | அங்கத்தவர்களுக்கு மாத்திரமான கழகம், சமூக மற்றும் மீளாக்க விளையாட்டுக் கழகங்கள் (எவ். எல். 13அ) :<br>1. மாநகர சபை பிரதேசம்<br>2. நகர சபை பிரதேசம்<br>3. ஏனைய பிரதேசம் | <br>600,000<br>400,000<br>200,000 | <br>25,000<br>25,000<br>25,000 |
| 13. | விளையாட்டுக் கழகங்கள் :<br>1. மாநகர சபை பிரதேசம்<br>2. நகர சபை மற்றும் ஏனைய பிரதேசங்கள் | <br>300,000<br>200,000 | <br>-<br>- |
| 14. | பியர், ஏல், ஸ்டவுட், வைன் விற்பதற்கான விசேட உரிமம்<br>சில்லறையாக விற்பனை செய்தல் சில்லறை உரிமம் (எவ். எல். 22ஏ)<br>விற்பனை நிலைய பிரதேசத்தில் பரிமாறுதல்,<br>விற்பனை செய்தல் (எவ். எல். 22பீ) (சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்றவை/பெறாதவை) | <br>100,000<br><br>150,000 | <br>2,500<br><br>2,500 |
| 15. | தோட்டப் பகுதி சிற்றுண்டிச்சாலைகள் :<br>1. கள்ளு மட்டும்<br>2. சாராயமும் கள்ளும் | <br>40,000<br>100,000 | <br>10,000<br>10,000 |
| 16. | வைன் விற்பனை | 1,000 | - |
| 17. | கள்ளை சேகரிக்கும் நிலையத்திற்கான உரிமம் | 25,000 | - |
| 18. | குடிபானமற்ற மதுசாரம் இறக்குமதி, வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பனவற்றிற்கான உரிமம் | 50,000 | - |

அட்டவணை "ஆ"

மதுசார பாவனைக்காக அறவிடப்படும் மூன்றாண்டுக் கட்டணம்

| தொடர் இல. | உரிமத்தின் தன்மை | 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர ஹோட்டல்கள் (ரூபா மில்லியன்) | 5 நட்சத்திர மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர வகுப்பு ஹோட்டல்கள்/விற்பனைக்கூட ஹோட்டல்கள்/விற்பனைக்கூட வில்லாக்கள்/மரபுரிமை ஹோட்டல்கள் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | 250 அறைகள் அல்லது அதற்கு மேல் | 6.0 | 10 |
| 2. | 200 அறைகள் அல்லது அதற்கு மேல் | 4.5 | 8 |
| 3. | 100 அறைகள் அல்லது அதற்கு மேல் | 3.5 | 6 |
| 4. | 50 அறைகள் அல்லது அதற்கு மேல் | 2.5 | 4 |
| 5. | 7 அறைகள் அல்லது அதற்கு மேல் | 1.5 | 2 |

3- 78/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.